## தருமபுரி மாவட்டத்தில் இன்று தேசிய மக்கள் நீதிமன்றம்

## மாவட்ட சட்டப்பணிகள் ஆணைக்குழு தலைவர் தகவல்

தருமபுரி மாவட்டத்தில் இன்று (09.09.2023) தேசிய மக்கள் நீதிமன்றம் ( நேஷனல் லோக் அதாலத் ) நடைபெற்றது.

இது குறித்து முதன்மை மாவட்ட நீதிபதியும் மாவட்ட சட்டப்பணிகள் ஆணைக்குழுவின் தலைவருமான திரு.அ.மணிமொழி அவர்கள் தமது செய்தி குறிப்பில் கூறியிருப்பதாவது:-

நீதிமன்றங்களில் நீண்ட நாட்களாக நிலுவையிலுள்ள வழக்குகளை விரைவாகவும் சமரச முறையிலும் தீர்த்து வைப்பதற்காக தேசிய மக்கள் நீதிமன்றம் மாண்பமை தேசிய சட்டப்பணிகள் ஆணையக்குழுவின் உத்தரவின்படியும் மாண்பமை சென்னை உயர் நீதிமன்றம் மற்றும் மாண்பமை தமிழ்நாடு மாநில சட்டப்பணிகள் ஆணைக்குழுவின் வழிகாட்டுதலின் படியும் இன்று 09.09.2023 ஆம் தேதி (சனிக்கிழமை) தருமபுரி மாவட்ட ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகத்தில் நடைபெற்றது. இதுபோன்று தருமபுரி மாவட்டத்தில் உள்ள அரூர், பாலக்கோடு,பென்னாகரம், பாப்பிரெட்டிப்பட்டி மற்றும் காரிமங்கலம் உள்ளிட்ட ஐந்து தாலுகா நீதிமன்ற வளாகங்களிலும் நடைபெற்றது.

இதில் நீதிமன்றத்தில் நீண்ட நாட்களாக நிலுவையில் உள்ள 2287 வழக்குகள் எடுத்து கொள்ளப்பட்டு அதில் வழக்குகளுக்கு சமரசம் பேசி தீர்க்கப்பட்டு அதற்கான சமரச தொகை ரூபாய் க்கு தீர்வு காணப்பட்டது . மேலும் வங்கி வாராக்கடன் வழக்குகள் எடுத்து கொள்ளப்பட்டு இதில் 185 வழக்குகள் பேசி தீர்க்கப்பட்டு மொத்தம் ரூபாய் க்கு முடிக்கப்பட்டது. இவ்வாறு அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.